**O.S. 82/2016 , 04.08.2021, 03.10 pm - 04.10 pm**

**வா.சா.1, மாணிக்கம், த/பெ.முனிசாமி**

சாட்சி குறுக்த் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்சசி :-**

எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு இல்லாமல் மற்ற இரண்டு வழக்குகள் உள்ளது என்று சொன்னால் ஒரு வழக்கு தான் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியும் என்றால் தெரியும் சர்வே எண்.165/5 ஆகும். பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் சொத்து சம்பந்தமான பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண்ணும், என்னுடைய சொத்தின் சர்வே எண்ணும் வேறு என்றால் சரிதான், இரண்டு சர்வே எண்களுக்கும் இடையே வேறு ஏதேனும் சர்வே எண்கள் உள்ளதா என்றால் இல்லை. எனக்கும், பிரதிவாதிக்கும் ஒரே சர்வே எண்ணில் உட்பிரிவாகி வரவில்லை என்றால் சரிதான், இருவருக்கும் வெவ்வேறு சர்வே எண்கள். பிரதிவாதியின் மூதாதையர் ஆதிகாலத்திலிருந்து அவர்களுடைய சொத்தில்தான் இருந்து வருகிறார்கள் என்றும், நான் தான் புதிதாக அந்த இடத்திற்கு நிலம் வாங்கி வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்து எந்த வருடத்தில் வாங்கிய சொத்து என்றால் 1999 ஆகும். வழக்கு சொத்தை அளந்து பார்க்காமல் நான் சொத்து வாங்கினேன் என்று சொன்னால் சரிதான், ஆனால், ஆவணங்களான பட்டா மற்றும் பத்திரத்தை பார்த்து சொத்தை கிரையம் பெற்றேன். நிலத்தையும் பார்க்காமல், சொத்தையும் அளக்காமல் சொத்தை வாங்கியபடிதான் பிரதிவாதியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1999ஆம் வருடம் யாரிடம் சொத்தை வாங்கினேன் என்றால் கோவிந்தசாமியிடமிருந்து வாங்கினேன். கோவிந்தசாமிக்கு எவ்வாறு சொத்து வந்தது என்று பட்டா வாங்கி பார்த்தேன் என்றால் பார்த்தேன். எந்த ஆவணப்படி கோவிந்தசாமிக்கு சொத்து வரப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோவிந்சாமிக்கு எந்த ஆவணப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, மூதாதையர் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னார்கள். பத்திரமா அல்லது பட்டாவா என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் எவ்வளவு சொத்து வாங்கினேன் என்றால் 1 ஏக்கரா 16 செண்ட் ஆகும். 1 ஏக்கரா 16 செண்ட் சொத்தை ஒரே பத்திரமாக தான் கிரையம் பெற்றேன். நான் வாங்கிய சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு கிழக்கே ராமசாமி, மேற்கே தனகோட்டி என்கிற முனிசாமி, வடக்கே கோபால், தெற்கே வெங்கடேசன்/பிரதிவாதி ஆகியோரின் சொத்து உள்ளது. எனக்கு செக்குபந்தி விவரம் தெரியாது என்றும்ட, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறும் ெ சக்குபந்தியும், வா.சா.ஆ.1ல் உள்ள செக்குபந்தி விவரமும் வெவ்வேறு என்று சொன்னால் சரியல்ல. என் சொத்திற்கு வழியே இல்லை என்று சொன்னால் நான் வழியை பற்றி கேட்கவில்லை. நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் வழி இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்று

சொன்னால் கிழக்கு மேற்காக எனக்கு வழி கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதியின் சொத்திற்கு அருகில் வழி எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தில் பிரதிவாதியின் சொத்து பக்கமாக வழி இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, பிரதிவாதியின் சொத்து பக்கத்தில் எனக்கு வழி உள்ளது. எனக்கும், கால்நடை மற்றும் வண்டிகள் செல்வதற்கு பிரதிவாதியின் இடத்திற்கு அருகாமையில் வழி எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாங்கிய சொத்திற்கு பட்டா ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பட்டா எவ்வளவு நாட்கள் கழித்து வாங்கினேன் என்றால் 2005-ற்குள் வாங்கினேன், 6 வருட காலதாமதம் என்று சொன்னால் சரிதான். 2005ல் பட்டாவை வாங்கவில்லை என்றும், 2015ல் தான் பட்டா வாங்கினேன் என்றும், அந்த பட்டா போலி பட்டா என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3 ல் குறிப்பிட்டுள்ள அளவுகள் வெவ்வேறானவை என்று சொன்னால் சரியல்ல. 2005ல் சொத்தை அளந்து பார்த்து தான் பட்டா வழங்கினார்களா என்றால் இல்லை, ஆவணங்களை பார்த்து வழங்கினார்கள். நிலத்தை அளப்பதற்கு வட்டாட்சியருக்கோ அல்லது கிராம நிர்வாக அலுவலருக்கோ, நில அளவையருக்கோ மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா என் பெயரில் மாற்றிக்கொள்வதற்கு மனு ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் வாங்கிய பட்டாவில் என் பெயர் மட்டும் உள்ளதா அல்லது மற்றொருவர் பெயர் சேர்ந்துள்ளதா என்றால் என் பெயர் மட்டும் தான் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.8 ஆன பட்டாவை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர்கள் என்னுடைய இடத்தில் இடைஞ்சல் செய்தவர்கள். வா.சா.ஆ.8ல் உள்ள நபர்கள் அனைவருடைய சொத்தும் என்னுடைய இடத்திற்கு அருகாமையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆன பட்டாவில் உள்ள நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. ஏன் சேர்க்கவில்லை என்பதற்கான காரணம் எனக்கு தெரியாது என்று சொன்னால் அவர்கள் வழக்கிற்கு தேவையில்லாத நபர்கள் ஆகும். வா.சா.ஆ.8 ஆன பட்டாவில் உள்ள நபர்களை சேர்க்காமல் வழக்கை நடத்துவதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் என்னுடைய சொத்து சம்பந்தபட்டதே தவிர, பிரதிவாதியின் சொத்து சம்மந்தப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்து சம்பந்தமான எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3-ம் என்னுடைய சொத்திற்கு சம்பந்தமானதே தவிர, பிரதிவாதியின் சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்று சொன்னால், பிரதிவாதிக்கும் சேர்த்துதான் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 எப்பொழுது வாங்கப்பட்டது என்றால் 2013ம் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து தான் பெறப்பட்டது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.4 ஆவணம் நீதிமன்றத்திற்கு உகந்தது அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.4 ஆன வரைபடத்தை வைத்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது செல்லாது என்று சொன்னாலும், வழக்கு தாக்கல் செய்த அடித்தளமே செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை வைத்து தான் முக்கோண வடிவமான நிலம் என்று குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தை மட்டும் பார்த்து அல்ல, மற்ற ஆவணத்தையும் பார்த்துதான் கூறுகிறேன். நிலம் முக்கோண வடிவம் அல்ல என்றும், பார்வைக்காக அமைக்கப்பட்ட ஒரு புள்ளி என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சொத்தும், பிரதிவாதியின் சொத்தும் ஆதியில் இருந்து அளக்காமல் வா.சா.ஆ.4 ஆவணத்தை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5 வழக்கு சொத்து சம்பந்தமானது அல்ல என்று சொன்னால் சரியல்ல, சர்வே எண்ணும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் என்னுடைய சொத்திற்கு சம்மந்தப்பட்டது தான். எதற்காக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் நிலத்தை அளவீடு செய்யாமல் ஒன்றரை வருட காலமாக அலைகழித்ததால் மனு கொடுத்தேன். நான் கொடுத்த மனுவை இணைக்காமல் வா.சா.ஆ.6 ஆன ரசீதை மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது போலியாக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. காவல்துறை கண்காணிப்பாளரிடம் எதற்காக மனு கொடுத்தேன் என்றால் பிரதிவாதிகள் தொல்லை கொடுக்கிறார்கள் என்று கொடுத்தேன். பிரதிவாதிகள் தொல்லை கொடுத்ததாக காண்பிக்க மனு எதுவும் இணைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எத்தனை முறை கலெக்டர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தேன் என்றால் ஒரே முறை தான் மனு கொடுத்தேன், மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6, 7 நானாக தயாரித்ததாக என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார்படுத்தி கொண்டது என்றும், அந்த ஆவணங்கள் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. மனு எதுவும் தாக்கல் செய்யாமல் பெறப்பட்ட ரசீதுகளை வைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு செல்லாது என்றும், அதனால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சொத்தும் ரோடிற்கு உள்ளேயும், பிரதிவாதியின் சொத்து ரோட்டிற்கு வெளிப்பக்கமாகவும் உள்ளது என்று சொன்னால், என்னுடைய சொத்து ரோட்டை ஒட்டி உள்ளது. ரோடு, பிரதிவாதியின் சொத்து அருகே உள்ள வரப்பு ஓரம் தேக்குமரம் உள்ளது என்றும், அது பிரதிவாதி வைத்தது என்று சொன்னால் சரியல்ல, வரப்பை ஒட்டி தேக்குமரம் உள்ளது, அது நாங்கள் வைத்தது. தேக்குமரத்திற்கு சுமார் 21 வயது இருக்கும். என்னுடைய சொத்து வாங்கும்போது 3 தேக்குமரம் உள்ளதா காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் நான் வாங்கிய 1 ஏக்கரா 16 செண்ட் நிலமும் தேக்கு தோப்பு தான். நான் சொத்து வாங்கும்போது தேக்கு தோப்பு என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கிற்காக தற்பொழுது தான் தேக்குமர தோப்பு என்று கூறுகிறேன் என்றால், தற்பொழுது தேக்குமரத்தை வெட்டிவிட்டேன். எனக்கு சொந்தமான அனைத்து தேக்கு செடிகளையும் வெட்டி எடுத்துவிட்டு, வழக்கில் உள்ள தேக்குசெடிகள் பிரதிவாதிக்கு உரிமைஉள்ளது என்பதால் வெட்டி எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல,

பிரச்சனை இருப்பதால் விட்டுவிட்டேன். மேற்படி சங்கதிகளை என்னுடைய வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் எதுவும் சொல்லாமல், என்னுடைய வழக்கை காப்பாற்றுவதற்காக தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே உள்ள வரப்பிற்கான நீளம், அகலம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். குறைந்தது 150 அடி நீளம் இருக்கும். பிரதிவாதிக்கு சொந்தமான சர்வே எண்.165/1பி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடை கட்ட வேண்டும் என்று யார் கூறியது என்று சொன்னால் பிரதிவாதி கூறினார். எந்த தேதி, வருடம், மாதம் என்று என் வழக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். யார் வந்து அளவீடு செய்தார்கள் என்றால் உங்களை போல் 3ம் நபர்கள் வந்து அளவீடு செய்தார்கள். நான் ஏதேனும் ஆட்சேபனையும் செய்தேனா என்றால் செய்தேன், என்னுடைய ஆட்சேபனையும் மீறி அளவீடு செய்தார்கள். என்னுடைய சொத்து எதுவும் அளவீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய சொத்தில் சுமார் 10 அடி ஆக்கிரமித்து அளவீடு செய்தார்கள். அந்த 10 அடி எடுக்ககூடாது என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் கூறியதுபோல் வழக்கு சொத்தில் கடை கட்டிடம் எதுவும் இல்லை, மாட்டுதீவணமாக உள்ளது என்று சொன்னால் தற்பொழுது கடை எதுவும் இல்லை. எனக்கும், பிரதிவாதிக்கு அடிதடி ஏற்படும் சமயத்தில் காவல்நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், வருடம், மாதம் தெரியாது, அடித்து என்னுடைய மனைவி மற்றும் மகன் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தனர். எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் தான் வாக்கு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் என்னுடைய மனைவியும் மகனும் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேரக்கப்பட்டார் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடக்காமல் நடந்ததாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செல்லாது என்று ஜெசான்னால் சரியல்ல. காவல்நிலையத்திற்கும் சென்றும் எந்த புகாரும் கொடுக்கவில்டலை, வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அம்பலூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாருக்கான மனு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை என்றும், வழக்கிற்காக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள 3 தேக்குமரம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும், அதை அபகரிக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள நிவாரணம் சரியல்ல என்றும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் பரிகாரத்திற்கு ஏற்ற நீதிமன்ற கட்டணம் செலுத்தாதல் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இதுநாள் வரை பிரதிவாதி அவருடைய சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால், என்னுடைய சொத்தையும் சேர்த்து தான்

அனுபவித்து வருகிறார். மேற்படி சங்க்தியை சொல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் எனறு சொன்னால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு சமமந்தமில்லை என்பதால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.